
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12

இதழ் - 5



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

**தமிழ்நாடு, இந்தியா.**

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற **40க்கும்** அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/– மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பவுலின் ரோமப்பயணத்திலிருந்து... | 1 |
| 2. | ஜெபித்த உங்களுக்கு நன்றி | 10 |
| 3. | கள்ளப்போதகத்தை ஏன் அநேகர் ஏற்றுக் கொள்கிறார்கள்? | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | தெரிந்து கொள்ளுங்கள் | 17 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷசம் பின்னணி (பாகம் –1) | 19 |
| 7. | வாலிபர் பகுதி | 23 |
| 8. | நோவாவின் பேழையும் கிறிஸ்துவின் சபையும் | 26 |
| 9. | தேவனை மகிமைப்படுத்துங்கள் | 32 |

THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 12 MAY -1999 Issue - 5

## ஆசிரியவுரை

# பவுலின் ரோமப்பயணத்திலிருந்து...

பயணங்கள் மூன்று வகைப்படும். அவை மண் மார்க்கம்,விண்மார்க்கம், நீர் மார்க்கம் ஆகியன. இம் மூவகைப் பயணத்தில், ஏதாவதொன்றில்கூட அனுபவமில்லாதவன் இப்பூமியில் இருக்க முடியாது. ஏனெனில், எல்லோரும் எப்போதும் ஏதாவதொரு மார்க்கப் பயணத்தை மேற்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், மேற்கொள்ளப்படும் அனைத்து பயணங்களும் ஒருவனுடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறாமல், சில பயணங்கள் என்றும் நினைவில் நிற்கக் கூடியவைகளாக அமைந்துவிடும். அதற்குக் காரணங்கள் பல இருக்க முடியும். ஒருவேளை அப்பயணத்தின் மூலம் அடைந்த நன்மைகளோ, பெற்ற சிறப்புகளோ அல்லது அனுபவித்த துன்பங்களோ, பட்ட நஷ்டங்களோ, நேர்ந்த அவலங்களோ அதற்குக் காரணமாக இருக்கலாம். எப்படியோ ஒரு உறுதியான இடத்தை அவை வாழ்வில் பிடித்துவிடும்.

இவ்வகையில், பவுல் மேற்கொண்ட பிரயாணங்களை நாம் கவனித்துப் பார்த்தால், ஒருவேளை அவர் தனது ஊழியப்பாதையில், மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டு, பல பயண அனுபவங்களைப் பெற்றிருந்தாலும், அவரின் ரோமப் பயணம் தனிச்சிறப்புக்குரியதாகவே உள்ளது. ஏனைய

பெரும்பாலான பயணங்களைப் போல இதுவும் ஒரு நீர் மார்க்கப் பயணம் தான். இம்மார்க்கத்திற்கே உரிய சில பொதுவான சிரமங்கள் இதிலும் இருந்ததும் உண்மையே. இருப்பினும் அம்மூன்றில் கிடைக்காத சில அனுபவங்கள், அவரது ரோமப் பயணத்தில் அவருக்கு கிடைத்தே உள்ளது. அதற்கான, பல காரணங்களில் அவர் ஒரு விசாரணைக் கைதியாக அப்பிரயாணத்தில் அழைத்துச் செல்லப்பட்டதும் ஒன்று. இப்பயணம் பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் 27,28 ஆகிய அதிகாரங்களில் நாம் விபரமாகக் காணலாம்.

இதிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக்கொள்வதற்கு முன்பாக, இப்பயணத்தின் பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், கடுமையான எச்சரிப்புக்கும், பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் (21:11-13) எருசலேம் பயணத்தை மேற்கொண்டு, அங்கு சுமார் ஒரு வார காலம் தங்கி, நசரேயனாகிய இயேசு, மரித்தோரிலிருந்து எழுந்த தேவனுடைய குமாரனென்று, பயமின்றி பலருக்கும் பிரசங்கித்தபடியால், எதிர்பார்த்தபடியே எதிர்ப்புகள் ஏராளமாய்க் கிளம்பி காவலில் வைக்கப்பட்டான். அப்:22,23 அதிகாரங்களில் இது குறித்து நாம் படிக்கலாம்.

எப்படியும் பவுலைக் கொலை செய்ய வேண்டுமென்று தாங்கள் தீட்டின திட்டம் தவிடுபொடியானதால் (23:21-24) சதியால் செய்ய முடியாததை சட்டத்தால் சாதித்துப் பார்க்கலாம் என்று எண்ணி, வாக்குத் திறனோடு வாதத் திறமையும் சேர்த்துப் பெற்றிருந்த தெர்த்துல்லு(24:1) என்ற வழக்கறிஞனை வாடகைக்கு அமர்த்தி வந்து, அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை ஆளுநர் பேலிக்ஸ் முன்பாக லாவகமாக எடுத்து வைத்தனர். ஆனால், அவர்களின் எல்லாப் பொய் குற்றச்சாட்டுகளுக்கும் சரியான பதிலடி கொடுத்து, சாதுரியமாகப் பவுல் வழக்காடினதைக் கண்ட பேலிக்ஸ், யூத மார்க்கத்தின் காரியங்களைத் தான் திட்டமாய் அறிந்திருந்தபடியால், பவுலுக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்க முடியாமல் திணறி, சேனாபதி லீசியா வரும்வரை வழக்கை ஒத்திவைப்பதென்று முடிவெடுத்து, அதுவரை பவுலைக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பித்தான் (24:10-23) இவ்வழக்கு பேலிக்ஸ்க்குப் பிறகு, பெஸ்துவிடம் வந்து, விருந்தாளியாக வந்த அகிரிப்பா ராஜாவின் முன்னிலைக்கும் கொண்டு செல்லப்பட்டதை நாமறிவோம் (அதி 25,26).

அகிரிப்பா ராஜா, பவுலைக் குற்றமற்றவன் என்று விசாரணையில் கண்டு, இந்த மனிதன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை செய்யலாம் என்று சிபாரிசு செய்தான். ஆனால், ஆளுநர் பெஸ்துவின் கயமையைக் கண்டு கொண்ட (25:9) பவுல், இராயனுக்கு அபயமிட்டிருந்தபடியால், ரோமுக்குச் செல்ல நேர்ந்தது. இங்கே நாம் ஒன்றை கவனிப்பது நல்லது வழக்கின் தன்மை காரணமாகவும், பெஸ்துவின்

கயமையினிமித்தமும், இன்னும் பவுலின் வேண்டுகோளினிமித்தமும், ரோமுக்குச் செல்ல நேர்ந்தது என்பதைக் காட்டிலும், தேவசித்தம் நிறைவேறும் படியாகவே அப்படி நடந்தது என்பதை நாமறிய வேண்டும். எப்படியெனில், எருசலேமில் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பவுல் விசாரிக்கப்பட்ட அன்றிரவே இப்படியாக பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது"... **பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல, ரோமாவிலும் ச ாட்சி கொடுக்கவேண்டும் என்றார்"** (23:11): ஆகவே, ஒரு காரியத்தின் போக்கு எப்படித் திசை மாறிப்போனாலும், ஏற்ற. இறக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும், இறுதியில் தேவச் சித்தம் நடந்தே தீரும்.

சரி. அப்போஸ்தலர் இருபத்தேழாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலிருந்து பவுலின் ரோமப் பயணம் தொடங்குகிறது. அகஸ்து பட்டாளத்தை சேர்ந்த யூலியு என்ற நூற்றுக்கதிபதியின் தலைமையின் கீழ் பவுலும், அரிஸ்தர்க்கும், வைத்தியனாகிய லூக்காவும், பவுலின் சக கைதிகளும் பயணத்தை மேற்கொண்டனர். மாரிக்காலத்துக்கு முன்பாகவே, தங்கள் முழுப்பயணத்தையும் முடித்துவிட வேண்டுமென்பது ஆரம்ப திட்டம். ஏனெனில், மாரிக்காலத்தில், மத்திய தரைக் கடலின் இப்பகுதி, பயணத்திற்கு ஏற்றதாக இராமல் தாறுமாறாகப் பொங்கி எழும். அச்சமயத்தில் பிரயாணிப்பது மிகுந்த ஆபத்தானது. ஆகவேதான், அப்போஸ்தலன் பவுல், ரோமச் சிறைச்சாலையிலிருந்து, தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் துரோவா பட்டணத்திலிருக்கிற தனது மேலங்கியையும், புத்தகங்களையும், தோல் சுருள்களையும் எடுத்துக்கொண்டு, மாரிக்காலத்துக்கு முன்பாக வரும்படி ஜாக்கிரதைப்படு என்று கூறியுள்ளார். (4:13,21)

இப்படி, அதிக ஆபத்துக்களை அதிகமாக உள்ளடக்கிய கடல் பிரயாணத்தை அவர்கள் செசரியாவிலிருந்து தொடங்கி, அதிரமித்தியம் போகும் கப்பலில் முதலில் ஏறி, வெகு சிரமங்களைக் கடந்து, ஒரு வகையாக நல்ல துறைமுகம் என்ற இடத்திற்கு வந்து சேர்வதற்குள்ளாகவே போதும் போதுமென்றானதோடல்லாமல், வெகுகாலமுமாகிவிட்டது(27:8, ).

இக்கட்டத்தில் பவுல், இனிப் பயணத்தைத் தொடர்வது உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பற்றது என்று எச்சரித்தான் (27:10) ஆனால் இவன் ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு, கப்பலில் இருந்த **பெரும்பாலானவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக,** அநேகரின் ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டு பயணம் தொடர்ந்தது. (27:12)

அச்சமயத்தில், அநேகரின் ஆலோசனை தான், நியாயமானது என்று நினைக்குமளவுக்கு, நிலைமையும் சாதகமாகி, இதமான **தென்றல் மெதுவாயடித்தது.** (27:13) நல்லவேளை, இந்த மனிதனின் ஆலோசனையை நாம்

புறக்கணித்தோம் என்று தங்களுக்குள் பேசவும் செய்தனர். ஆனால், என்ன நடந்தது தெரியுமா? கொஞ்ச நேரத்துக்குள்ளே, யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று அடித்து கப்பலைச் சீரழித்தது (14) கப்பலும், காற்றின் போக்கிலே அடித்துச் செல்லப்பட்டது.

கப்பலிலிருந்தவர்களுக்கு, அநேக நாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த காற்றும், பெரும மழையும் அடித்துக்கொண்டிருந்தபடியால் இனித் தப்பிப் பிழைப்போமென்கிற நம்பிக்கை முழுமையாக அற்றுப்போயிற்று(27:20). எல்லோரும் போஜனம் பண்ணாமல், பல நாள் பட்டினி கிடப்பதைக் கண்ட பவுல், தன் சொல்லைக் கேட்க மறுத்த இவர்கள் சாகட்டும் என நினைக்காமல், அவர்கள் நடுவே நின்று, கடந்த இரவிலே கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினபடி அவர்களை திடப்படுத்தி, “ எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்” என்றான் (27:25)

இதன்பிறகு, பவுலின் ரோமப் பயணம் முடிவுக்கு வந்து, தேவனால் திட்டமிடப்பட்டவைகளைச் செய்து முடித்தான் என்று வேத வசனங்களில் நாம் வாசிக்கிறபடியால், இப்பயணத்திற்கு இங்கேத ானே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இதுவரை நாம் பெற்றுக் கொண்ட பயண அனுபவத்திலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியுமென்று முயற்சித்துப் பார்ப்போம்.

## I பெரும்பான்மை பார்ப்பது ஆபத்தானது

பவுலின் கடல் பயணத்தில் நாம் கற்றுக் கொள்ளும் முதல்பாடம், பெரும்பான்மை பார்ப்பது, குறிப்பாக தேவன் சம்பந்தப்பட்ட காரியத்தில் பார்ப்பது அழிவுக்கு அழைத்துச் செல்லுமென்பதாகும்.

தங்களது ரோமப் பயணத்தில் மோசம் நேர்ந்து, கிரேத்தா தீவின் ஒதுக்கிலே ஓடி வருத்தத்தோடே லசேயா பட்டணத்துக்கு அருகேயுள்ள நல்ல துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தனர். தாங்கள் மேற்கொண்ட பயணம் எசகு பிசகாகி, நாட்களும் வெகுவாக கடந்து போனதால், பவுல் “ ..... **இனிக்கப்பல் யாத்திரை செய்வது பெரும் மோசத்திற்கு ஏதுவாகுமென்று அவர்களை எச்சரித்தான்**” (27:9) ஆனால் நடந்தது என்ன? சரியான சமயத்தில் சொல்லப்பட்ட ஆலோசனை, ஏற்றுக்கொள்ளப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டது. ஆனால், இப்படிப்பட்ட ஆலோசனைகள் பற்றி வேதாகமம், ஞானி சாலமோனைக் கொண்டு, “ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்” (நீதி 25:11) என்று சொல்லுகிறது. அது மாத்திரமல்ல, எது நல்லது என்று ஒரு வாக்கெடுப்பும் நடத்தப்பட்டு, மெஜாரிட்டித் தீர்ப்பு

எடுத்துக் கொள்ளப்பட்டு தேவ மனிதனின் அர்த்தமுள்ள ஆலோசனை பெரும்பான்மை பலத்தால் அடியோடு நிராகரிக்கப்பட்டது.

ஆனால் இந்தப் பெரும்பான்மை பெலத்தால், அதன் தீர்ப்பால், கப்பல் அலைக்கழிக்கப்பட்டு, பெரும் சேதத்துக்கு உள்ளாயிற்று என்பது நமக்கு தெரிந்ததே. இதே நிலைதான் இன்றைய கிறிஸ்தவத்திலும் உள்ளது. **“பெரும்பான்மை”** என்ற தேவ விரோதச் செயல், கிறிஸ்தவத்தின் ஆன்மீக வாழ்க்கையை அலைக்கழித்து, பெரும் தீமைக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ளது. மெய்க் கிறிஸ்தவம் தழைத்து ஓங்காமால், முளைத்த குழிக்குள்ளாகவே வெம்பிக்கிடப்பதற்குக் காரணம், இந்தப் பெரும்பான்மைக் கணக்கு தான். ஆம், கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் தங்களுடைய நிலையை பெரும்பான்மையினடிப்படையிலே தான் இன்றைக்கு தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

தங்கள் செயலில், நீதியும் நியாயமும், உண்மையும், வசனங்களின் ஆதாரமும் எந்தளவு இருக்கிறதென்று பாராமல், தாங்கள் செய்கின்ற அதே செயலை, அல்லது தங்களின் அதே வழிபாட்டு முறையை எவ்வளவு பேர் செய்கிறார்கள் என்று இரகசியக் கணக்கெடுத்து, அதனடிப்படையில் முடிவு செய்கின்றனர். ஆனால், தேவனுக்கடுத்த நமது காரியங்களை இவ்விதம் தீர்மானிப்பதற்கு வேதாகமத்தில் ஏதாகிலும் ஆதாரம் உண்டா? சொல்லுங்கள். **“தீமை செய்ய திரளான ஜனங்களைப் பின்பற்ற வேண்டாமென்று தானே வசனம் சொல்கிறது”** (யாத் 23:2) இந்தப் பெரும்பான்மைப் பித்தால் கிறிஸ்தவ உலகில் வளர்ந்து விட்ட தீமைகள் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

வேதாகமத்தில் இல்லாத பொய்யான உபதேசங்களையும், குதர்க்கமான போதனைகளையும் மூலதனமாக வைத்து வியாபாரம் செய்யும் ஆவியின் கூட்டத்தார், ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்யமுடிகிறதே, அது எப்படி? பாதைமாறிப் பயணம் செய்யும் கள்ளப் போதகர்கள் படுவேகமாகச் செல்ல முடிகிறதே, அது எப்படி? சட்டத்தின்படி யுத்தம் செய்யாத அற்புத ஊழியர்கள் அநேகர், வெற்றிமேல் வெற்றி குவிக்க முடிகிறதே, அது எப்படி? வேத வசனங்களில் வேர் கொள்ளாமலே, விசுவாச ஊழியம் என்ற பெயரால், வீதிகளில் உலாவந்து, வீடுகள் தோறும் படுஜோராக ஏறி இறங்க முடிகிறதே, அது எப்படி? மனந்திரும்புதலைப் பற்றியும் ஞானஸ்நானம் பற்றியும், இரட்சிப்பு குறித்தும் தங்கள் பிரசங்கங்களில் ஒரு வார்த்தை கூடப் பேசாமலே, பெரும் பிரசங்கிகள் என்ற பட்டத்தை போகிறபோக்கில் பெற்று விடுகிறார்களே அது எப்படி? சொல்லுங்கள் இவையனைத்தும், இந்தப் பெரும்பான்மை என்ற பாவம், பெற்றெடுத்த வீச்சுக்குட்டிகளே.

அன்பரே, எப்படி கப்பலில் இருந்தவர்களின் பெரும்பான்மை அவர்களை அழிவுக்கு அழைத்துச் சென்றதோ, அதைப் போலவே, நமது ஆன்மீக வாழ்வின் பெரும்பான்மையும் அழிவுக்கே அழைத்துச் செல்லும் ஜாக்கிரதையாயிருப்போம்.

## II தென்றலைத் தேடி கடுங்காற்றைப் பெற்றுக்கொண்டனர்.

இரண்டாவதாக, இந்த ரோமப் பயணம் நமக்கு தரும் பாடம் தேவ ஆலோசனையை நாம் மீறினால் என்ன நடக்குமென்பது.

அநேகரின் ஆலோசனைப் படியே பிரயாணம் தொடர்ந்த போது, சலனமற்ற கடலும், இதமான தென்றலும் கிடைத்தது. ஆம், அப்பொழுது இந்தப் பெரும்பாலானவர்களுக்கு ஏக குஷி. நல்லவேளை அந்த தேவ மனிதனின் வார்த்தைகளை மீறினோம் என்று பெருமிதப்பட்டு, தங்களின் அடுத்த காரியத்தை வேகமாகச் செய்தனர். (27:13). ஆனால், கொஞ்ச நேரத்துக்குள்ளே, யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று கப்பலில் மோதியது.

நண்பரே! தேவ மனிதன் மூலமாக வெளிப்பட்ட தேவ ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு, பெரும்பான்மையினடிப்படையில் காரியமாற்றிய போது, சுகமான கடலும், இதமான தென்றலும் கிடைத்தது உண்மைதான். இல்லையென்று யாரும் சொல்லவில்லை. ஆனால், அடுத்து நடந்தது என்ன? தெரியும் தானே.

நம்முடைய வாழ்க்கையிலும் கூட, நாம் தேவனை அலட்சியம் செய்து அவரின் வார்த்தைகளை விட்டு விலகிச் செல்லும்போது, அதன் ஆரம்பம் இன்பமாகவே இருக்கும். தென்றலைப் போன்ற சுகமான அனுபவங்கள் வலிய வந்து சேரும். இறுதியில், அது கடுங்காற்றாக மாறி நம்மைச் சீரழிக்கும். உதாரணமாக, புகைக்கும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றல் போலிருக்கும். ஆனால், இறுதியில் புற்றுநோய் என்னும் புயல் வரும். சூதாடும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றலாக இருக்கும். அதன் பிறகு அநேக நஷ்டங்கள் என்ற புயல் திடீரென வரும். குடிக்கும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றலாக இருக்கும். பிறகு சரீர உபாதைகள் என்ற கடுங்காற்று சுழன்று அடிக்கும். விபச்சாரம் செய்யும் ஒருவனுக்கு, அதன் ஆரம்பம் தென்றலாகவும், அதனால் வரும் "எய்ட்ஸ்" என்னும் ஆட்கொல்லி நோய், யூரோக்கிலிதோனாகவும் இருக்கும்.

இப்படிச் சரீரச் சீரழிவை ஏற்படுத்தும், இக்கொடுஞ் செயல்களில் மனிதன் விட்டில் பூச்சிகளைப் போல வலியச் சென்று சிக்கிக் கொள்கிறானோ அதைப்போலவே, ஆன்மீக வாழ்விலும் நடக்கிறது. ஒன்றான மெய்த்தேவனால்

ஆன்மீக வாழ்வுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள தேவ ஆலோசனைகள் பெரும்பான்மை பெலத்தால் பகிரங்கமாக மீறப்படும் பொழுதெல்லாம் பிசாசானவன் சலனமற்ற கடலையும், இதமான தென்றலையும் அந்த துணிகரக்காரர்களுக்கு கொடுக்கிறான். ஆம், தேவனுடைய வார்த்தைகளை மீறி நடக்கிற ஒவ்வொருவனுக்கும் அவர்களின் தரத்திற்கும், தேவைக்கும் ஏற்றபடி விதவிதமான தென்றல்களைக் கொடுத்து, தேவனை விட்டு இழுத்துச் செல்கிறான். ஆம், அற்புதம் என்ற தென்றலையும், அடையாளம் என்ற தென்றலையும், சாட்சி என்ற தென்றலையும், தரிசனம் என்ற தென்றலையும், பெயரும், புகழும், என்ற தென்றலையும், வருமானம் என்ற தென்றலையும், பதவி என்ற தென்றலையும், இன்னும் இது போன்ற அநேக தென்றல்களையும் அவன் வரவழைக்கிறான். உண்மைதான்.

ஆனால், இந்த உலக ஆதாயங்கள் என்றும் சுகமான அனுபவங்கள், உனது ஆன்மீக வாழ்க்கையில் யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றுக்குள் சிக்கவைக்கும் என்பதை மறந்து விடாதே. அப்பொழுது, உனது ஆவிக்குரிய வாழ்க்கை அலைக்கழிக்கப்படும். நீ தேவனற்றவனாகவும், ஒருவேளை, தேவனை ஆராதித்தாலும், சத்தியத்தின்படி ஆராத்திக்காதவனாகவும், மறுமையின் நம்பிக்கையற்றவனாகவும் மாறுவாய். ஆகவே, அருமையானவர்களே, நமது பரம கானானுக்கான பயணத்தில் **"பல தென்றல்களை"** நம்பி நாம் யாரும் மோசம் போக வேண்டாம்.

## III தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்

பவுலின் ரோமப் பயணம் தரும் மூன்றாவது பாடம், எந்நிலைமை யிலும், தேவனிடத்திலும், அவருடைய வார்த்தைகளின் பேரிலும் நம்பிக்கையாயிருப்பது.

கப்பல், யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றில் சிக்கிச் சீரழிந்த போது, எப்படியாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று, கப்பலிலிருந்தவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். அதற்காக, சரக்குகளையும், கப்பலின் தளவாடங்களையும் கூட தூக்கி கடலில் எறிந்தனர். (27:18,19). தங்களுடைய ஆலோசனையின்படி காரியங்கள் நடக்கிறதென்ற, களிப்பில் திளைத்திருந்தவர்கள், இப்போது வியர்த்து விறுவிறுக்க, ஆளாளுக்கு இறுதிப் பார்வை பார்த்துக் கொண்டனர். எல்லோருக்கும் **"இனித் தப்பிப் பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று"** (27:20).

இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தான், .... பவுல் அவ ர்கள்

நடுவிலே நின்று: **மனுஷரே, இந்த வருத்தமும், சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தா தீவை விட்டு புறப்படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது என்று அவர்களை இலேசாக இடித்துக் காட்டி, மேலும் நோகடிக்க அது சரியான தருணமல்ல என எண்ணி, அவர்களை திடப்படுத்தி இவ்விதமாகச் சொன்னான். "எனக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கு ம் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்"** என்று (27:25)

இங்கே பவுல், தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்று சொல்வதின் பொருள் என்ன? உலகிலுள்ள பெரும்பாலான மக்கள், தங்களையும் ஒரு ஆன்மீகவாதி என்று காட்டிக் கொள்ள, நானும் தெய்வ நம்பிக்கையுடையவன் என்று ஒப்புக்குச் சொல்கிறார்களே, அது போலவா? அல்லது தேவ வசனத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, தன்னை தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்று சொல்லி கொள்கிறார்களே, அது போலவா? அப்படியில்லையென்றால், பின் எது போல? பவுலின் இந்த வார்த்தைகளுக்கு ஆழமான பொருள் உண்டு. அது என்ன என்று பார்ப்போம்.

ஆம், கடந்த இராத்திரியிலே, தேவனுடைய தூதன் பவுலிடத்தில் பேசியுள்ளான். தூதனைக் கொண்டு தேவன் வெளிப்படுத்தின வார்த்தைகள் என்னவென்று பவுலுக்குத் தெரியும். தேவனின் அவ்வார்த்தைகள் மீது பவுலுக்கிருந்த உச்சகட்ட விசுவாசம் தான், **"எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாக நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்"** என்பது. இங்கே, தேவனுடைய வார்த்தைகளுக்குப் பவுல் கொடுத்த மரியாதையின் அளவைக் கவனியுங்கள். எப்படிப் பவுலால், இவ்வளவு மரியாதை, தேவனுடைய வார்த்தைகளுக்குக் கொடுக்க முடிந்தது? இதிலே இரகசியம் ஒன்றுமில்லை. தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையைப் பவுல் நன்றாக அறிந்திருந்தார். வானமும், பூமியும் அவருடைய வார்த்தைகளின் வல்லமையால் உண்டானதென்பதும் அவ்வார்த்தைகளால் கடல் பிளந்ததும், கல்லறைகள் திறந்ததும் அவருக்குத் தெரியாததல்ல.

ஆகவேதான், பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ வார்தைகளின் படியாகவே நடக்குமென்று ஆணித்தரமாக விசுவாசித்தான். அற்புதங்கள் நடைமுறையில் இருந்த அந்த நாட்களில் - பல அற்புதங்களைச் செய்த பவுல், கடல் கொந்தளிப்பிலிருந்து அற்புதமான முறையில் விடுதலை கிடைக்குமென்று எதிர்பார்க்காமல், தனக்கு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளின்படியாகவே நடக்குமென்று நம்பினான். ஒரு அற்புதம் செய்து தங்களைக் காப்பாற்றுமென்று தேவனிடம் மன்றாடவுமில்லை, தனக்கிருந்த அற்புத வல்லமையைக் கொண்டு ஒரு அற்புதத்தை நிகழ்த்த முயற்சிக்கவுமில்லை.

ஆனால், இன்றோ ஒரு உன்னத நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட அற்புதங்கள், முதல் நூற்றாண்டோடு முடிந்துவிட்டதென்று வேதாகமம். தெளிவாகச் சொல்லியிருந்தும், அற்புதங்கள் நின்றுபோன இந்நாட்களில் வாழும் அநேகர், அதிலும் தங்களை மிஞ்சின பக்திமான்களென்று சொல்லிக்கொள்கிறவர்கள், தங்களுக்கிருக்கும் சளித்தொல்லைக்குக் கூட, "தேவனே அற்புதமான முறையில் விடுதலை தாரும்" என்று கூப்பாடு போடுகின்றனர். கிறிஸ்தவத்தின் இச்சீர்கேடான நிலையைப் பார்த்து ஆத்திரப்படுவதா? அல்லது ஆதங்கப்படுவதா? என்று புரியவில்லை.

பவுலுக்கு தூதனைக் கொண்டு தேவன் தமது வார்த்தைகளை வெளிப்படுத்தினது போலவே, பரலோகத்தின் தேவன், தமது ஆவியானவரைக் கொண்டு, வேதவசனங்கள் என்னும் வார்த்தைகளை நமக்கு கொடுத்துள்ளார். பவுலைப் போல, எந்நிலையிலும், இந்த வார்த்தைகளின் மீது நாம் பிடிப்பும், பற்றும், நம்பிக்கையுமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பவுலுக்கு வைக்கப்பட்டிருக்கும் நீதியின் கிரீடம் நமக்கும் கிடைக்க வேண்டுமானால், தேவனுடைய வார்த்தைகளின் மீது நாம் அபார நம்பிக்கையுடையவர்களாயிருக்க வேண்டும்.

அப்படியானால் தேவன் கொடுத்திருக்கும் இரட்சிப்பின் திட்டத்தை நாம் நம்பவேண்டும் (மத்.28.19,20; மாற் 16:16) சபையின் முக்கியத்துவம் குறித்து வேதம் பேசும்போது நம்பவேண்டும் (மத். 16:16) அப். 2:47; எபே. 5:23-25) கர்த்தரின் பந்தி குறித்து வேதம் பேசுவதை நம்ப வேண்டும். (மத்.26:26-30). உயிர்த்தெழுதலைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் வேதம் பேசுவதை நம்பவேண்டும். (மத். 25:31-46 / யோவா. 5:28-29) இயேசுக் கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்று தேவன் சொல்லுவதை நம்பவேண்டும். (வெளி.20:11-15,21:8) இவைகள் தான் தேவனை நம்புவதென்பதின் பொருள். இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் நான் தேவனை நம்புகிறேன் என்று யாராவது சொன்னால் அது பித்தலாட்டம், அது மாய்மாலம். நாம், பித்தலாட்டமும், மாய் மாலமுள்ளவர்களாக இல்லாமல், பவுலைப் போல் தேவன் மீது உண்மையான நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அருமையான வாசகரே! அன்பான தேவனுடைய பிள்ளையே! பவுலின் ரோமப்பயணத்தைப் பாதியில் நிறுத்தி, அதிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொண்டோம். கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்தமாதம் பவுலை ரோமில் கொண்டு போய் சேர்த்து எஞ்சியுள்ள பாடங்களையும் கற்று, நமது வாழ்வில் ஆத்தும நன்மையடைவோம்.

தேவன் தாமே உங்களை ஆசிர்வதிப்பராக!

**EZS** ராஜநாயகம்.

# ஜெபித்த உங்களுக்கு நன்றி!

மே. 3 - 5, ஆகிய தேதிகளில் ஏலகிரி மலையில் நடந்த வேனிற்கால வேதாகம முகாமிற்காகவும், திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கிற்காகவும் ஜெபித்த உங்களுக்கு நன்றி! நன்றி!!

**வாசகர்களுக்கு முகாம் பற்றிய சில – தகவல்கள்:**

| | | |
|---|---|---|
| *பங்கு கொண்ட நாடுகள்* | - | **2** |
| *பங்கு கொண்ட மாநிலங்கள்* | - | **3** |
| *பங்கு கொண்ட மாவட்டங்கள்* | - | **15** |
| *பங்கு கொண்ட நகரங்கள்* | - | **30** |
| *பங்கு கொண்ட பிராந்திய சபைகள்* | - | **29** |
| *பங்கு கொண்ட மொத்த நபர்கள்* | - | **303** |
| *ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டு நற்செய்திக்கு கீழ்ப்படிந்தவர்கள்* | - | **15** |
| *புதிய அங்கத்தினர்களால் பயனடைந்த பிராந்திய சபைகள்* | - | **6** |

திருமறை ஆசானை வெளியிடும் காங்கயம் கிறிஸ்துவின் சபையரால் நடத்தப்படும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள், பங்குபெறுங்கள்.

ஆசிரியர்.

# கள்ளப் போதகத்தை ஏன் அநேகர் ஏற்றுக் கொள்கிறார்கள்?

வேதாகமத்தை வாசித்து தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்கிறவர்களுக்கு கள்ளப்போதகத்தை ஏன் அநேகர் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற கேள்வி எழுவது யதார்த்தம். ஏன் அவர்கள் இவ்வளவு எளிதாக வஞ்சிக்கப்பட்டு வழிதவறிபோகிறார்கள்? பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசத்தை ஏன் ஒருவரால் பார்க்க முடியவில்லை?

அநேகர் தாங்கள் வஞ்சிக்கப்பட வேண்டுமென்றே விரும்புகிறார்கள். தாங்கள் நம்புகிறதற்கு ஏற்றதாகவும், தாங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ விரும்புகிறார்களோ, அதற்கு ஏற்றதாகவும் தென்படுகிற உபதேசத்தை நாடித் தேடுகிறார்கள். சிலரோ சில தனிநபரால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் சொல்வதே சத்தியம் என்றும் அவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் சத்தியத்தை நிராகரித்துவிட்டோம் என்றும் நினைக்கிறார்கள். உலகத்தால் வஞ்சிக்கப்பட்டவர்களிடம் கூட இது உண்மையாய் திகழ்கிறது என்று பவுல் கூறுகிறார். ( ரோமர். 1:25)

இசையில் மயங்கிக்கிடக்கும் உலகில்தான் மக்களிடம் அப்படி தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதற்கு நல்ல சான்றைக் காணமுடியும். நாம் ஒரு சாதாரண இசையையோ அல்லது பாடலையோ மெருகூட்டி இசைப்போமானால் அதை மிக பிரபலமான பாடலாக மாற்ற முடியும். பணம்படைத்த ஒருவனால் உலகம் அறியாத ஒருவனை பிரபலமாக்கி, உலகப் புகழ்பெற்ற ஒருவனாக மாற்ற முடியும் என்பது மற்றொரு சான்று.

ஒருவன் ஒரு கனியையோ அல்லது காய்யையோ அடிக்கடி உண்பதன் மூலம் அதை பிடித்த உணவாக மாற்ற முடியும். இந்த நவநாகரீக உலகிலோ, விளையாட்டு உலகிலோ, அல்லது ஏதாவது பொருளோ அல்லது செயலோ, போதுமான விளம்பரத்தின் மூலமோ, உபயோகத்தின் மூலமோ அல்லது செய்கையின் மூலமோ பிரபலமாக்க முடியும் என்பது நாம் அறிந்ததுதான். அரசியல்வாதிகள் பொய் பிரசாரங்களை செய்தாலும் அவர்கள் விரும்புகிற பலனை அடைவதில் கைதேர்ந்தவர்கள்.

இதுவே மார்க்க உலகிலும் தெரிந்த உண்மையாய் இருக்கிறது. சிலுவையில் தொங்கிய கள்வன் ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டது போல இன்று நாமும் ஞானஸ்நானம் இல்லமாலேயே இரட்சிக்ப்படலாம் என்று சொல்வதை எத்தனை முறைக் கேட்டிருக்கிறோம். ஒரு சபையை போல மற்றொரு சபையும் நல்லது தான் என்றும், விசுவாசத்தினால் மாத்திரம் ஒருவன் இரட்சிக்கப்பட முடியும் என்றும் பாவத்தில் ஒருவன் பிறக்கிறான் என்றும், மற்றும்

ஆயிரக் கணக்கானவைகளைப் பற்றியும் எத்தனை முறை நாம் கேட்டிருக்கிறோம்.

கள்ளப்போதகனைகள் பிரபலமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருக்கிறது. ஏன்னென்றால் அநேக பிரசங்கியார்களும் போதகர்களும், பிரபலமான முறையில் அதை உலகெங்கும் போதிக்கிறார்கள். பொதுமக்களை கவரும் வண்ணம், பள்ளிகள் மூலமும், மருத்துவமனைகள் மூலமும், மற்றும் பல வகைகளிலும், அவைகளை நல்ல அச்சு வடிவிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும், அலங்கரிக்கப்பட்ட கூடிவரும் இடங்களிலும் பிரபலப்படுத்துகிறார்கள்.

அதற்கு மாறாக, கர்த்தருடைய சபை சிறிதாக இருக்கிறது. சத்தியத்தைப் பிரசங்கிக்கும் சில பிரசங்கியார்கள் தான் நம்மிடம் இருக்கிறார்கள். நாம் தவறுகளை சுட்டிக்காட்டி, தேவனுடைய சித்தத்தை அறிய, அவர்கள் வேதாகமத்திற்கு திரும்ப வேண்டுமென்று சொல்லும்போது நாம் ஒதுக்கப்பட்டவர்களாகவும், விமர்சிக்கப்பட்டவர்களாகவும், சிறுக்கூட்டமாகிய நாம் மட்டும் பரலோகம் போகிறோம் என்ற பெருமையுடன் இருக்கிறோம் என்றும் சித்தரிக்கப்படுகிறோம். சிலசமயம் விசுவாசத்தில் குன்றிய நமது சகோதரர்களும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இணங்கி, தங்கள் விசுவாசத்தை விட்டு, எதிர்தரப்பில் சேர்ந்து கொள்கிறார்கள். இது சோகமானது தான். அதிகமானோர் எப்போதும் சரியானவைகளை செய்வதில்லை. விசாலமான பாதையில் செல்பவர்கள் அநேகர், இடுக்கமான பாதையில் செல்பவர்கள் சிலரே என்றும் கிறிஸ்து கூறியுள்ளார். (மத்தேயு 7:13,14)

கர்த்தருடைய வார்த்தை சத்தியம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (யோவா. 17:17) சத்தியமே நம்மை விடுதலையாக்குகிறது. (யோவா. 8:32) நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லமாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்றும் கிறிஸ்து கூறியுள்ளார். இறுதியாக, இவரை நாம் தள்ளி, அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் ஒன்றிருக்கிறது என்று கிறிஸ்து கூறியுள்ளார். (யோவான் 12:48)

அநேகர் சில காரியங்களை செய்வதினால் அது சரியாகி விடாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மனிதனையும் அவனுடைய போதனைகளையும் நாம் பின்பற்றக்கூடாது எல்லா வகையிலும் அது தவறானதாக இருக்கும். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, விசுவாசித்து, கீழ்படியவேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் சரியானவர்களாக இருக்க முடியும். எல்லோரும் எதிர்த்து நின்றாலும் தேவனுடைய வழிதான் சரியானது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் சரியானவர்களாக இருக்க வேண்டுமென்றால் தேவனுடைய வழியைக் கைக்கொள்ளுங்கள்.

**J.C. சோட்.**

# நாம் கிறிஸ்தவர்கள்

ரேச்சல் ஞானஸ்நானம் பெற்று, அடுத்தநாள் காலையில் எழுந்திருக்கும்போது, இன்னும் அந்த இனிய உத்வேகத்தையும், புதிய சிருஷ்டியாய் இருப்பதினால் ஏற்பட்ட சமாதானத்தையும் உணரமுடிந்தது. ஞானஸ்நானத்தின் மூலமாய் சபைக்குள்ளாகவும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாகவும் பிறந்திருப்பதினால் அவருடைய எண்ணங்கள் தேவனோடுகூட ஏற்பட்ட உறவைப்பற்றி சிந்திக்கத் தொடங்கியது! 'நானும் ஆண்ட்ருவும் செய்த இந்தக் காரியத்தை உலகத்திலுள்ள எத்தனை மக்கள் செய்தார்களோ! எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். இந்தக்காலக்கட்டம் வரை நாங்கள் தேவனுடைய பார்வையில் சரியானவைகளைச் செய்திருக்கிறோம். இப்பொழுதுதோ எஞ்சிய வாழ்க்கையில் தேவன், நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாறோ? அதைக் கற்றறிய வேண்டியது அவசியமாய் இருக்கிறது'. இந்த சிந்தனைகளுடன் ஆண்ட்ருவை தூக்கத்திலிருந்து எழுப்பிவிடச் சென்றாள் ரேச்சல்.

உறக்கம் நிறைந்த கண்களை திறந்துகொணடு ' காலை வணக்கம், சகோதரி! என்றான் ஆண்ட்ரு. "புதிய வாழ்க்கையைத் தொடங்கி ஒரு நாள் ஆகியிருக்கிறதே! அதை எப்படி உணருகிறாய்?" என்றான்.

"அதிசயமாயிருக்கிறது" இது ரேச்சலின் பதில்.

"புதிய வாழ்க்கையை தொடங்கிய நாம் ஒவ்வொருநாள் காலையிலும் தேவனுடைய வார்த்தையைப் படித்து, அவைகளைக் குறித்து கலந்துரையாடி, நம்முடைய பிதாவிடம் ஜெபத்தினமூலமாய் எதை எடுத்துச் செல்லவேண்டுமோ அதை அவரிடம் தெரிவிப்பதையும் வழக்கமாக நாம் இன்றிலிருந்து செய்வோம்". என்ற ஆலோசனையை தெரிவித்தான் ஆண்ட்ரு. "நம்முடைய ஆத்துமா நித்தியத்திற்குரியதாய் இருக்கிறதினால், நம்முடைய சரீரத்திற்கு உணவளிப்பதைக்காட்டிலும், ஆத்துமாவிற்கு உணவளிப்பதின் அவசியத்தை முக்கியமாகக் கருத வேண்டும்."

ரேச்சல் வேதாகமத்தையும், ஒத்த வாக்கியத்தையும், நோட்டு புத்தகங்களுடன் எடுத்து வந்தாள்.

"வேதாகமத்தை சரியாகக் புரிந்துகொள்வதற்கு நாம் நம்முடைய நேரத்தில் ஒரு பகுதியை பழைய ஏற்பாட்டை படிப்பதற்கும் செலவிடவேண்டும்." என்றான் ஆண்ட்ரு.

"ஆம்" என ஒத்துக்கொண்டாள் ரேச்சல். " படைப்பில் தேவனுடைய வேலையைக் குறித்தும், கிறிஸ்து இந்த பூமியில் பிறக்கும்வரை வளர்ச்சி அடைய வழிநடத்தும். பிரிவு சபைகளில் பத்துக்கட்டளைகளையும், நியாயப் பிரமானத்தையும் கைக்கொள்ள வேண்டுமென்று அதிகமாய் போதிக்கப்படுகிறது. நாம் அதைப் பற்றி

புரிந்து கொள்வது அவசியம். ஆனால் அவைகளை எங்கு கண்டுபிடிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை".

"ஆதலால், நாம் ஆதியாகமத்திலிருந்து ஆரம்பிப்போம்..."

"ஆனால் கிறிஸ்துவைப்பற்றியும், சபையைப் பற்றியும் புதிய ஏற்பாட்டிலிருந்து நாம் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்." என்பதை வலியுறுத்தினாள் ரேச்சல். "நாம் இரண்டையும் செய்ய முடியாதா?" என்று வினாத்தொடுத்தாள்.

"கண்டிப்பாக முடியும்" என உறுதிகூறினான் ஆண்ட்ரூ. ஆகவே வேத ஆராய்ச்சியும், காலை ஜெப நேரமும் நாள்தோறும் செய்வது வழக்கமாய்த் தொடர்ந்தது. ஆண்ட்ரூவும், ரேச்சலுமாகிய இருவரும் ஒரு நாளை ஆவிக்குரிய விதமாய் தொடங்குவோமானால், அந்த நாள் முழுவதும் நம்முடைய எண்ணங்களை அவை நிறைக்கிறது என்ற உண்மையைக் கண்டனர். தீமோத்தேயு பிறப்பதற்கு முன்பாகவும், தேவனை தங்களுடைய வாழ்க்கையிலே மையமாகக் கொள்வோம் என்ற முடிவெடுப்பதற்கு முன்பதாகவும், அவர்களுடைய வாழ்க்கையும், அவர்களுடைய எண்ணங்களையும் சற்று திருப்பிப்பார்த்தபொழுது அவைகளின் வித்தியாசங்களைக் கண்டு, வியந்து போனார்கள். ஒருவருக்கொருவர் சாந்தமுள்ளவர்களாகவும், அதிகம் விட்டுக்கொடுக்கின்றவர்களாகவும் இப்பொழுது காணப்பட்டனர். பிரச்சனையை அணுகுவதிலே புதிய பொறுமை அவர்களிடத்திலே காணப்பட்டது. வாழ்க்கையின் குறிக்கோள் தலைகீழாக மாறிவிட்டது. பணத்தையும், பொருளையும் அதிமுக்கியம் என்றெண்ணி வந்த இவர்கள் இப்பொழுது அவைகளைப் பற்றி எள்ளளவே நினைக்கிறோம் என்பதை உணர்ந்தனர். இதுவதை இல்லாத சந்தோஷத்தையும், பாதுகாப்பையும் அவர்களால் உணரமுடிந்தது.

"உண்மையைச் சொல்வோமானால்". ரேச்சல் தன் சிநேகிதியாகிய எலிசபெத்திடம் தங்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த மாற்றங்கைப் பற்றி எடுத்துரைக்கையில், "நான் பிறரிடம் பேசிக்கொண்டிருக்கும் வேளையிலே எங்களுக்கு நேரிட்ட மாற்றங்களைப்பற்றி எடுத்துரைக்க சரியான தருணம் தேடுகிறேன். என்பதை உணரும்பொழுது ஆச்சரியமாயிருக்கிறது" என்று விளம்பினாள்.

"ஆனால், எனக்கு புரியவில்லை" என்றாள் எலிசபெத். "உன்னுடைய பெற்றோர் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். நீயும், அதே விசுவாசத்தில் வளர்க்கப்பட்டாய். இப்பொழுது என்ன மாற்றம் கண்டாய்?".

"மிகப்பெரிய மாற்றம் என்னவென்றால், வேதாகமத்தைப் படிக்கின்ற முறையிலும், எங்களது ஜீவியத்திற்கு அதுவே வழிகாட்டியாய் இருக்கிறது என்பதும்தான் இப்பொழுது ஏற்பட்ட மாற்றம்" என்று பதிலுரைத்தாள் ரேச்சல். "பார், என்னுடைய பெற்றோர்கள் ஃபேப்டிஸ்ட் சபையின் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள். நானும் இரட்சிப்பைக்குறித்தும், சபையைக்குறித்தும், ஏன் ஆராதனையைக்குறித்தும் கூட வேதாகமம் வித்தியாசமாய் போதிக்கிறது என்பதை அறிந்துகொள்ளும்வரை அதன் அங்கத்தினராய் இருந்தேன். ஆனால் இப்பொழுது நான் ஃபேப்டிஸ்டும் அல்ல, ஆண்ட்ரு கத்தோலிக்கரும் அல்ல. **நாங்கள் கிறிஸ்தவர்கள்!"**

"ஆனால் நீங்கள் வெறும் கிறிஸ்தவர்களாய் இருக்க முடியாதே!" என்று மறுப்புக்கூறினாள் எலிசபெத். "நாமெல்லோரும் கிறிஸ்தவர்கள்தான். ஆனால் மக்கள் நாம் எந்தவிதமான கிறிஸ்தவர்கள் என்றும், எந்த பிரிவு சபையார் என்றும் அறிந்துகொள்ள விரும்புவார்களே! எல்லோரும் ஏதோ ஒன்றில் இருக்கிறார்களே!"

"இதைத்தான் இப்பொழுது நான் விளக்க முயற்சிக்கிறேன்". என்றாள் ரேச்சல். "புதிய ஏற்பாட்டை நாம் வாசிக்கும்போது பிரிவுச்சபை என்பதொன்றில்லை. ஒருவனும் தான் எந்தவகையான கிறிஸ்தவன் என்றும் எடுத்துரைக்க தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருந்திருக்கின்றார்கள். வேதத்தில் உள்ள அப்போஸ்தலர் புத்தகத்தை நாங்கள் கவனமாக தியானித்தோம். தேவனுக்கு கீழ்படிவது எப்படி? என்று அந்த ஆதிமக்களுக்கு சொல்லப்பட்டது எதுவோ அதையே அப்படியே நாங்களும் செய்தோம். ஆகவே, நாங்கள் எவ்வகை கிறிஸ்தவர்களும் அல்ல. நாங்கள் கிறிஸ்தவர்கள் மாத்திரம்தான். இயேசுகிறிஸ்து ஆரம்பித்த ஆதிதிருச்சபையின் அங்கத்தினகளாய் இருக்கின்றோம்.".

"ஆனால், நீங்கள் ஏதோவொரு சபையில் சேர்ந்து ஆராதிப்பீர்கள் அல்லவா" என்றாள் எலிசபெத்.

"அது எங்களுக்கு பிரச்சனையாகவே இருந்தது" என்றாள் ரேச்சல். நாங்கள் எங்கள் நகரில் தேடினவரை, அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்ட உபதேசங்களையும், காரியங்களையும் கைக்கொள்கின்ற சபை ஒன்று இல்லை.

"பார். இயேசு தன் சபையைக் கட்டுவேன்" என்று வாக்களித்தார். உன் வேதாகமத்தை எடு. அவர் என்ன சொன்னார் என்பதை உனக்குக் காண்பிக்கிறேன் என்றாள். "...இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை' (மத் 16:18), பின்னும் அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் 47ம் வசனத்தில் இப்படியாக சொல்லப்பட்டுள்ளது. "...இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்." 37வது வசனத்தில் இரட்சிக்கப்பட இருந்தவர்கள் இப்படியாக வினா எழுப்பினார்கள். "....சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்". "அதற்குப் பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்... அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். (அப். 2:38,41). இதையேதான் நானும் ஆண்ட்ரூவும் செய்தோம். இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று நாங்கள் உண்மையாய் விசுவாசிக்கிறோம். உலகபிரகாரமான வாழ்க்கையில் இருந்தும், பாவமான காரியங்களில் இருந்தும் நாங்கள் விலகிநிற்கிறோம்.

எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட நாங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். அது மாத்திரமல்ல இப்படிச் செய்வதின் மூலம் தேவன்

எங்களை அவருடைய குடும்பமாகிய சபையில் சேர்த்தார். இது ஒரு பிரிவுச்சபை அல்ல என்பதை நாங்கள் அறிகிறோம். ஆகவே நாங்கள் ஞானஸ்நானம் பெற்றபொழுது பிரிவுச்சபை அங்கத்தினர்களாக ஆகவில்லை. இந்த நகரத்தில் இதே காரியங்களைச் செய்து அந்த ஆதிசபையின் அங்கத்தினர்களாக இருக்கிற சபை இருக்கிறதா? என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?

"தெரியாது". என ஒத்துக்கொண்டாள் எலிசபெத். "இன்றைய நாள்வரை அப்படிப்பட்ட ஒரு சபையை பற்றி நான் கேள்விப்பட்டதேயில்லை."

"ஆனாலும், புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஒரே சபை இதுதான்." என்று உறுதியாய்ச் சொன்னாள் ரேச்சல். "ஆகையால் நீங்கள் எப்பொழுதெல்லாம் வேதாகமத்தில் சபையைப் பற்றி வாசிக்கிறீர்களோ, அப்பொழுதெல்லாம் அந்த ஒரே சபையைக் குறித்துதான் வாசிக்கிறீர்கள்."

"ஆனால் உலகத்தில் இந்த சபை இன்னும் இருக்கிறதா! இயங்குகிறதா! என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று எனக்குத் தெரியும். உலகளவில் கிறிஸ்துவினுடைய சபை, எல்லாச் சபைகளிலிருந்தும் இரட்சிக்கப் பட்டவர்களால் உருவாக்கப் பட்டிருக்கிறது என்று எங்கள் போதகர் சொல்வார்" என்றாள் எலிசபெத்.

"ஆம், நானும் இப்படித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றால் ரேச்சல். "ஆனால் இரட்சிக்கப்பட வெவ்வேறு காரியங்கள் மக்களுக்கு போதிக்கப்படுகிறதே. அதைக்குறித்து நினைத்துப்பார். நான் ஒரு ஃபேப்டிஸ்ட் ஆக ஆனபொழுது என்னை ஞானஸ்நானத்திற்கென்று தண்ணீரில் முழுக்கினார்கள். ஆனால் நான் விசுவாத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்பட்டேன் என்று சொன்னார்கள். அந்த ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கு சம்பந்தம் இல்லாததாயிருந்தது. ஆண்ட்ரூ ஒரு கத்தோலிக்கன். ஆண்ட்ருவின் பெற்றோர் கத்தோலிக்கர்களாய் இருந்தார்கள். அவருக்கு சிறுவயதிலேயே தெளிப்பு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இவ்விரண்டு ஞானஸ்நானங்களும் அப்போஸ்தலர் நடபடிகளில், இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டவைகளல்ல. ஆகவே ஆண்ட்ருவும், நானும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவைகளை செய்யாதபொழுது அந்த ஆதிதிருச்சபையில் எப்படி அங்கத்தினர்களாய் இருக்க முடியும்?".

" நான் ஒரு விடுதலைச் சபையின் அங்கத்தினர், ஆனால் நான் ஞானஸ்நானமே பெறவில்லை," யோசனையோடே சொன்னாள் எலிசபெத். "ஞானஸ்நானத்தைக் குறித்தோ, சபையைக் குறித்தோ அங்கே போதிக்கப்படுவதே அரிதாயிருக்கிறது. நான் இதுவரை இதைக் குறித்து நினைத்தே பார்த்ததில்லை."

அப்படியா! சரி, " நாங்கள் வீட்டிலேயே தேவனை ஆராதிக்கின்றோம். வரும் ஞாயிற்றுக்கிழமை நீங்கள் வருகின்றீர்களா! என அழைத்தாள் ரேச்சல். "இது ஒரு அற்புதமான காரியமாக இருக்கும்". எலிசபெத் ஆச்சரியத்துடன் கூறினாள். அப்பொழுது, "பார்க்கலாம்" என விடைபெற்றாள் எலிசபெத்.

***B.B. சோட்***

***R.R. நாயகம்***

தெரிந்து கொள்ளுங்கள்

# சபை ஆளுகை அமைப்பு?

## பாடம் - 3

**முன்னுரை:**

1. பாடம் ஒன்று, இரண்டு உடன்படிக்கைகளை பற்றியும், நாம் புதியஉடன் படிக்கைக்கு கீழ்ப்பட்டிருக்கிறோம் என்பது பற்றியும் பார்த்தோம்.
2. பாடம் இரண்டு, சபையைக் குறித்தான சில அடிப்படை உபதேசங்கள் பற்றியது.
3. இந்தப் பாடம், சபையின் ஆளுகை சம்பந்தமாக வேதாகமத்தின் போதனை பற்றியது.

**விவாதம்:**

**I <u>*இயேசுவானவர் சபைக்கு தலையாயிருக்கிறார் (எபெ. 1:22-23;4;15 கொலோ :1:18)*</u>**

**A.** இயேசுவுக்கு "**சகல**" அதிகாரமுள்ளது. (மத். 28:18-20, யோவா: 17:2)

**B.** இயேசு நமது தீர்க்கதரிசி, ஆசாரியர், மற்றும் ராஜாவாயிருக்கிறார்.

1. தீர்க்கதரிசி ..........உபா. 18:15; அப் :3:22-23)
2. ஆசாரியர் ............ எபி:7:17,21,28.
3. ராஜா ................ வெளி. 17:14

**II <u>*மூப்பர்கள் ' சபையை போஷித்து, பாதுகாத்து, கண்காணிப்பதற்கு - சபையின் சரியான முறையில் செய்யப்படுவதற்கு.*</u>**

**A. எத்தனை மூப்பர்கள்.**

1. பன்மையில் (ஒன்றுக்கு மேற்பட்ட) (அப்.14;23;15:2,4-6, தீத்.1:5)
2. ஒரே ஒரு பிராந்திய சபையைத் தான் கண்காணிக்கிறார்கள். (1பேதுரு. 5:2, அப். 20:28 "மந்தை")
3. ஒரு பிராந்திய சபையில் மூப்பர்கள், ஆலோசனை கரங்களை நீட்டலாம். (அப். 20:17 20:18)

**B. இவர்களின் பணி:**

1. விழித்திருத்தல் (எபி. 13:17, எசே. 3:16-21 ல் உள்ளது போல்)
2. கிறிஸ்தவர்களை மேம்படுத்தி, சபையை வளரச் செய்கிறார்கள் (எபே. 4:11-16)
3. சபையை ஒழுங்குபடுத்துவதற்கு (1. தெச. 5:12-14)
4. மந்தையை மேய்க்கும் மேய்ப்பர்கள் போல சபையை மேய்ப்பதற்கு (1பே. 5:1-3; அப். 20:24)

5. வியாதியஸ்தர்களுக்காவும், மன்னிப்பின் தேவையிலிருப் போருக்காவும் ஜெபிக்கவும். (யாக். 5:13-18)

**C. மூப்பர்களிடம் சபை அங்கத்தினர்கள் நடந்து கொள்கிற விதம்:-**

1. நேசித்து மதிக்க வேண்டும். (1 தெச. 5:12-14)
2. கீழ்ப்படித்திருத்தல்(எபி. 13:17)

**III உதவிக்காரர்கள் (சபையின் வேலையில் மற்றவர்களை வழிநடத்தும் வேலைக்காரர்)**

**A.** அவர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள்(அப். 6:3)
**B.** குறிப்பான சில தகுதிகளிருக்க வேண்டும். (அப். 6:3,5; தீமோ.3:8-13)
**C.** தங்களின் பணியில் கவனமாயிருந்து, தங்கள் வேலையில் நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும் (1 தீமோ. 3:10)

**IV தனிப்பட்ட அங்கத்தினர்கள்**

**A.** பிரதான கட்டளையை ஏற்றிருக்க வேண்டும் (மத். 28-2-20)
**B.** கர்த்தருடைய பணியில் ஒற்றுமையுடனிருக்க வேண்டும். (அப். 2:44)
**C.** வழிநடத்துகிறவர்களுக்கு கீழ்படிய வேண்டும். (எபி.13:17)
**D.** சபைகூடி வருதலை விட்டு விடாதிருக்க வேண்டும் (எபி. 10:25)
**E.** விசுவாசத்தின் வாழ்க்கை வாழ்ந்து, கிறிஸ்துவின் மாதரியாய் இருக்க வேண்டும்.

**முடிவுரை.**

1. சபை ஒரு ஜனநாயக அமைப்பு அல்ல - அதாவது, தாங்கள் எதை விசுவாசிக்கிறோமென்பதை தெரிந்தெடுப்பதற்கு ஓட்டெடுப்ப முறையெல்லாம் கூடாது.
2. சபை ஒரு ஏகாதிபத்திய இராஜ்யம் - கிறிஸ்துதான் ஒரே ராஜா.
3. சபையானது, மந்தையின் ஆடுகள் போன்றது. கிறிஸ்து பிரதான மேய்ப்பர் பிராந்திய சபையின் மேய்ப்பார்கள், இவருக்கு கீழாக இருந்து, அவரின் வேலையை வழி நடத்துகிறார்கள். (1பே:5:4)
4. இவ்வகை ஆளுகை அமைப்பு, சபையானது அங்கீகரித்து அதன்படி செயல்படுகிறது.
5. இந்தக் கொள்கைகளின் படி வாழ்கின்ற விசுவாசிகளின் கூட்டமைப்பு தான் புதிய ஏற்பாட்டு சபையாகும். கீழ்க்கூறப்பட்டவர்களைப்போலல்ல.

a) பிற்கால வெளிப்படுத்தலைக் கொண்டவர்கள் (மார்மன்)
b) ஒரு மனிதனின் உத்திரவுப்படி செய்கிறவர்களல்ல (போப்)
c) மனிதனைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்களுமல்ல. (பிரிவினைச்சபைகள்)

**Toney.I. Smith** **EZSR**

# வெளிப்படுத்தின விசேஷம் பின்னணி
# (பாகம் -1)

வெளிப்படுத்தின விசேஷம் வேதாகமத்தன் இறுதி புத்தகமாக மாத்திரம்மல்லாமல், தேவன் மனுக்குலத்துக்குக் கொடுத்த இறுதி வேதவசனங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இந்த உண்மையானது, இந்நூலை தனித்தன்மை கொண்டதாகவும், முக்கியமானதாகவும் மாற்றுகிறது. ஆனால் இப்புத்தகம் இன்னும் இதன் செய்தியினடிப்படையிலும், எழுதப்பட்டுள்ள முறையிலும் கூட தனித்தன்மை கொண்டதாக உள்ளது. இந்நூலில் உருவகமொழியில் எழுதப்பட்டுள்ள பகுதிகள் நிறைய உள்ளது. குறிப்பாக, மூன்றாம் அதிகாரத்திற்குப் பிறகு, மறைபொருளாக சொல்லப்பட்டவை அதிகமாக உள்ளது. இப்படியிருப்பது, இதைப்படிக்கும் ஒருவன் அதைத் தவறாகப் புரிந்து கொள்ளும்படியாகக் கூடச் செய்துவிடுகிறது, குறிப்பாக உருவகமொழிபகுதிகளைத் தவறாக அணுகும்போது இப்படி நடக்கும்.

அநேக கள்ள உபதேசங்கள், வேதாகமத்தில் உள்ள வேறெந்த நூலை காட்டிலும் இதில் அதிகமாக வேரூன்றியுள்ளது. கிட்டத்தட்ட பிரிவினைச் சபைகள் அனைத்துமே இந்நூலை அடிப்படையாகக் கொண்டு எழும்பியவைதான். இந்நூலின் இறுதிப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படையான மற்றும் கடுமையான எச்சரிப்பைப் பார்க்கும் போது, இப்படிப் பல உபதேசங்களும், பல சபைகளும் உண்டாயிருப்பது ஒரு கொடுமையான காரியம். " இந்த புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார், ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்" (வெளி.22:18-19) இந்த புத்தகத்தில் உள்ளவைகளைப் புரிந்து கொள்வதிலுள்ள சிரமங்களினால், நாம் இதை ஜாக்கிரதையாகப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதிலிருந்து நம்மை விலக்கிவிடக் கூடாது. ஒருவேளை நாம் அப்படிச் செய்தால், தேவனிடத்திலிருந்து கொடுக்கப்படும் மிகுந்த உற்சாகமான செய்திகள் நமக்குக் கிடைக்காதபடி, நமக்கு நாமே கேடு செய்கிறவர்களாக இருப்போம். கடுமையான எச்சரிப்போடு இப்புத்தகம் முடிவுற்றாலும், மிகுந்த ஆறுதலோடே இந்நூல் ஆரம்பமாகிறது.

"இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" (வெளி. 1:3) முறையோடும், ஊக்கத்தோடும் நாம் இந்நூலைப் படித்தால், வேதாகமத்திலுள்ள ஏனைய அனைத்து, நூல்களைக் காட்டிலும், இது மிகுந்த உற்சாகம் தரக்கூடியது என்பதை நாம் கண்டுகொள்ள முடியும். தேவனால் அவருடைய பிள்ளைகளுக்கு அளிக்கும்படியாக வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதத்தையும், மன உற்சாகத்தையும் நாம் பெற்றுக் கொள்ள நம்மைத் தூண்டும்படியான தொடர் பாடங்களை, இந்நூலைப்-படிப்பதன் மூலமாக ஆரம்பிக்க விரும்புகிறேன்.

வெளிப்படுத்தலில் உள்ள குறிப்பான உபதேசங்களைப் பார்ப்பதற்கு முன்பாக, இப்புத்தகத்தைச் சரியாகப் படித்துப் புரிந்து கொள்வதற்கு, நம்மை ஆயத்தப்படுத்தும்படியாய், இதன் பின்னணியை சற்றுச் ஆழமான முறையில் தொடங்க விரும்புகிறேன்.

முதலாவது, வெளிப்படுத்தின விசேஷம், யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டுள்ளது. (வெளி 1:4) கி.பி. 96ல் இந்நூலை அவர் எழுதினார். இந்நூலின் ஒவ்வொரு வார்த்தையும் தேவனிடத்திலிருந்து வந்தவை. தேவனால் வெளிப்படுத்தப்பட்டுத்தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் யோவான் அப்படியே எழுதியுள்ளார். (வெளி 1:1-2,11;10:4). தங்களது கிறிஸ்தவ வாழ்க்கையில் சோதனைகளையும், துன்புறுத்தல்களையும் சந்தித்துக்கொண்டிருந்த கிறிஸ்தவர்களை தைரியப்படுத்தி, பெலப்படுத்துவதுதான் இந்நூலின் பிரதான நோக்கம். "மேற்கொள்ளுதல், பற்றி இந்நூல் வலியுறுத்திச் சொல்கிறது. (வெளி. 2:7,11,17,26,3:5,12,21;5:5;6:2) சாத்தானும், அவனுடைய ஏவலாட்களும் சரீரப்பிரகாரமாக நம்மை மேற்கொள்ளலாம் (வெளி 11:7;13:7) ஆனால், 1) கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவும், 2) கிறிஸ்துவின் வசனத்தின் மூலமாகவும் 3) இன்னும் , நமக்கானவைகளையும், நம்முடைய ஜீவனையும் வெறுத்து விடுவதின் மூலமாக கிறிஸ்து, சாத்தானை மேற்கொண்டது போல, நாம் மேற்கொள்ள முடியும் (வெளி 3:21). இந்த பூமிக்கான வாழ்வில், நம்மைத் துன்பப்படுத்தி சரீரபிரகாரமாக நம்மை மேற்கொள்ளுகிறவர்களை கிறிஸ்து முடிவிலே மேற்கொண்டது போல, நாமும் மேற்கொள்ள முடியும்.. (வெளி. 6:2,17:14) ஆனால், இந்த வாழ்க்கையை மேற்கொள்ளுகிறவர்களுக்கு பலனாக, வெளிப்படுத்தலில் மகத்தான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (வெளி. 2:7,11,17,26;3:5,12,21;15:2;21:7) ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது எவ்வளவு அருமையான, வல்லமையான, அவசியமான செய்தியென்று பாருங்கள்! ஆகவே, இந்நூலைப் படித்தால், சிறந்த ஆசீர்வாதங்கள் உண்டென்று (வெளி1:3) வாக்குத்தத்தம் செய்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

வெளிப்படுத்தின நூலை அப்போஸ்தலன் யோவான் பத்மூதீவில் (1:9) இருந்தபோது எழுதினார் (வெளி 1:4). எபேசுவுக்கு தென்மேற்கில், சுமார் 110 கி.மீ

தொலைவில் அமைந்துள்ள பாறைகளாலான சிறிய தீவு தான் பத்மூ. குற்றவாளிகளை நாடுகடத்துவதற்காக, ரோமானியர்களால் இத்தீவு பயன்படுத்தப்பட்டது. ரோமச் சக்கரவர்த்தி டொமிஷியன் என்பவனால், கி.பி. 94 அல்லது 95ல் யோவான் கடத்தப்பட்டுள்ளான் என உலக சரித்திரத்திலிருந்து அறியப்பட்டுள்ளது. கி.பி. 96ல் மன்னர் மரணமடையுமட்டும் அவன் அங்கேயே இருந்துள்ளான். இந்த வகையாகத் தான், இப்புத்தகம் எழுதப்பட்ட காலத்தைத் தோராயமாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் கடந்துவந்த ஒரு மோசமான காலகட்டத்தில் இது எழுதப்பட்டுள்ளது. நீரோ என்னும் மன்னன் கி.பி. 54-68 வரை அரசாட்சி செய்துள்ளான். இவனுடைய ஆளுகையின் கடைசி ஐந்து வருடத்தில், அதிக எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்களை ஈவு, இரக்கமற்ற முறையில், கொடுமைபடுத்தி மரணத்திற்குள்ளாக்கினான். ஆனால் நீரோவினுடைய அடக்குமுறையும், துன்புறுத்தலும் ரோம பட்டணத்தோடு நின்றுபோனது.

அதற்குப் பின், கி.பி.81-96 வரை ஆளுகை செய்த டொமிஷியன், ரோம சாம்ராஜ்ஜியம் முழுவதும், திட்டமிட்ட முறையில் முன்னெப்போதும் இருந்திராத வகையில், கிறிஸ்தவர்கள் மீது துன்புறுத்தலைக் கொண்டுவந்தான். இவனுக்கு முன்னாலிருந்த மாமன்னர்கள் ஜனங்கள் வணங்கின போது மாத்திரம் ஏற்றுக்கொண்டார்கள், ஆனால் இவனோ அவ்வணக்கத்தில் வெறியாயிருந்தான். இவன்,லத்தீன் மொழியில், "எஜமான் மற்றும் தேவன்" என்று அர்த்தம் தரும் ஒரு பட்டத்தை, தனக்கென்று தெரிந்து கொண்டான். இவனுடைய அமைச்சர்கள் இவனுக்குக் கடிதம் எழுதும்போது, இவனை "தேவன்" என்று குறிப்பிடவேண்டும். ரோம சாம்ராஜ்யமெங்குமுள்ள அனைவரும் தன்னை வணங்க வேண்டுமென்பதில் தீர்மானமாக இருந்தான். கிறிஸ்தவர்கள் அப்படி வணங்க மறுத்தபோது, அவர்களைப் பயங்கரமாகத் துன்பப்படுத்தினான். கி.பி. 86-96 வரையிலும், குறிப்பாக இக்காலகட்டத்தின் இறுதிப்பகுதியில், அநேகமாயிரமானவர்கள் தங்களின் விசுவாசத்திற்காக மரணத்திற்குப் பாத்திரவான்களாக்கப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டது. வெளிப்படுத்தல் நூலில் இதைக் குறிக்கும் அநேக வேதபகுதிகள் உண்டு (வெளி 2:13,6:9,20:4) சிமிர்னாவில் இருந்த சிறைச்சாலையில், விசுவாசத்தினிமித்தம் அடைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவர்களை, உற்சாகப்படுத்தும்படியாக இவ்விதம் எழுதப்பட்டுள்ளது. "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத்

தருவேன்(வெளி 2:10) வெளி 1:9ல் யோவான்."உபத்திரவத்திற்கு உடன் பங்காளி" என்று சொல்லும்போது. இதை குறிப்பிட்டே சொல்லியுள்ளார். பத்மூ தீவிற்க்கு கடத்தப்பட்ட ஒரு கைதிதான் யோவான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நாடு கடத்தல், என்பது, சவுக்கடி, நிலையான கட்டுகள், ஆடைக்குறைவு, ஆகாரக்குறைவு, தரையில் உறக்கம், ஒரு போர்ச்சேவகனின் கடுமையான மேற்பார்வையில் வேலைசெய்தல் என்று எல்லாமே அடங்கியிருக்கும். தான் எழுதப்போகிறவைகளைத் தான் முதலில் அனுபவித்து, பின்னரே யோவான் எழுதியுள்ளார். இப்புத்தகத்தைப் படிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு இது ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருந்தது. இந்நூலின் செய்தி உற்சாகத்தையும், மேற்கொள்வதற்கு மிகுந்த நம்பிக்கையையும் கொடுக்கக்கூடியதாக இருந்தது. எல்லாக் கிறிஸ்தவர்களும் பாடுபட வேண்டியது அவசியமானதால், (IIதீமோ 3:12) நாம் பெலனையும், ஊக்கத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, இந்நூலுக்குள் செல்வோம், ஏனெனில், அந்நாட்களில் உண்மையாகவே பாடுபட்டதேவனுடைய பிள்ளைகளுக்கு இவைகளைக் கொடுக்கும்படியாகவே இது எழுதப்பட்டது. இதை நாம் படிப்பது, நமக்கு உண்மையாகவே ஆசீர்வாதமாக இருக்கும்.

EZSR Jon Macon


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி* (170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை* (112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 20/–

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
தபால் பெட்டி எண் 28, காங்கயம் - 638 701.

*குறிப்பு* : *தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# கொஞ்சத்தில் ராஜ்யத்தை தவறவிட்டவன்

வாழ்க்கை எனும் சக்கரத்தின், அச்சாணியாம் வாலிபப்பருவத்தில் ஓயாமல் ஒய்யாரமாய் ஓடிக்கொண்டிருக்கும் எனதருமை வாலிப நெஞ்சங்களுக்கு, அன்பால் பகைவரையும் நண்பர்களாக்கும் வல்லமைவாய்ந்த வானபரன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எடுத்த காரியத்தை இம்மியளவும், பிசகாமல் முடிக்கவேண்டும் என்பதற்காய் கண்ணயராமல் கவனமாய் காரியத்தை கனகச்சிதமாய் நிறைவேற்ற வேண்டும் என நினைப்பர் சான்றோர். சிலரோ தான் வரைந்த சித்திரத்தில் மிகச்சிறு சிதைவு ஏற்பட்டதால் சஞ்சலம் அடையும் சித்திரனைபோல், காரியத்தில் கவனமின்மையால் கொஞ்சத்தில் தவறவிட்டோமே! என நெஞ்சு நோக, நஞ்சை அருந்தியவன் துன்புறுவது போல் துயரப்படுவார்கள்.

கர்த்தரிடத்தில் உணர்வுள்ள இருதயத்தை இலவசமாய் இனிதே பெற்ற சாலொமோன் தான் மொழிந்த நீதிமொழிகளில் “கேளுங்கள், மேம்பாடான காரியங்களைப் பேசுவேன், என் உதடுகள் உத்தம காரியங்களை வசனிக்கும்” (நீதி. 8:6).என்கிறான். நாம் மேலானவைகளையும், உத்தமமான காரியங்களையும் கவனமாய் கேட்க வேண்டும் என்பதில் அவனுக்கு மிக அலாதி அக்கரை. அப்படி கேட்பதோடு நில்லாமல் நம்முடைய காரியங்கள் தவறாக இருந்தால் அதுவும் தேவன் சம்பந்தப்பட்ட விசயத்தில் உடனே நாம் உத்தமமாய் உன்னிப்பாய் கவனித்து நம்மை திருத்துவது அவசியம். அப்படி செய்ய வேண்டும் என்பதற்காய், உத்தம காரியத்தை மனமுவந்து கேட்டுவிட்டு உலக கவலை கழுத்தை கட்டிக்கொண்டதால் **தேவராஜ்யத்தை கொஞ்சத்தில் தவறவிட்ட அரசன் அகிரிப்பா அலங்காரமாய் நிற்கிறான்.**

## *காரியங்களை கவனமாய் கேட்கவேண்டும் என்ற மனதிருந்தது:—*

பரமனின் பகைவனாய் இருந்த பவுல், தமஸ்குவின் பாதையில் பரத்தில் இருந்து பதில் கிடைத்தவுடன் பரமனுக்காய் பறந்தோடி பக்குவமாய் தேவராஜ்யத்தை ஆங்காங்கே ஏற்படுத்தினான். அதைக் கண்ட யூத மார்க்க தலைவர்கள் இவனையும், சபையையும் அழிக்க கங்கனம் கட்டிக்கொண்டு அவனை ஆலோசனை சங்கத்திற்கு முன்நிறுத்தி சதி விளையாட்டின் சுருதியை சுகமாய் இசைத்ததின் விளைவு. பேலிக்ஸ்க்கு முன்பும், பின்னர் பெஸ்துவுக்கு முன்பும் விசாரணை கைதியாய் நிற்கநேரிட்டது, அதுமாத்திரமல்ல ரோம ராஜ்யத்தின் சக்கரவர்த்தியிடம் முறையிடும்படியும் நடந்தது. அந்த சமயத்தில்தான், அகிரிப்பா, பெஸ்துவை பார்க்கும்படி செசரியா சென்றான். அங்கே பவுலை பற்றி அறிவிக்கப்பட்டது. உடனே நம்மவன் பவுல் சொல்லும் நற்காரியங்களை கேட்கவேண்டும் என்கிற உத்தம இருதயம் கொண்டவனாகவே

இருந்தான். கர்த்தருடைய காரியங்களை கேட்பது அவசியம் என்பதை நன்றே புரிந்தவனாய் இருந்தான். இராஜாவாயிற்றே. அறிந்துகொள்ள வேண்டும் என்கின்ற வாஞ்சை இல்லாமலா இருந்திருக்கும். தன்னுடைய ஆத்மீகவாழ்வில் எப்படி நடக்கிறோம் தப்படி போடுகிறோமோ என தன்னை தானே பரீட்சித்து பார்க்கும்படி இப்படியாய் பவுலின் பதிலை கேட்க மனதுள்ளவனாய் இருந்தான். தேவனுக்கென்று முதல் ஆலயத்தைக் கட்டிய ஞானி கூறுகையில், "...... தன் நடையைக் கவனித்தறிகிறவன் தன் ஆத்துமாவை காக்கிறான்" (நீதி 16:17) என்ற ஓர் பேருண்மையை பாங்காய் பளிங்குகல்லில் செதுக்கியது போல செப்பியுள்ளான்.

தேவனுக்கடுத்த காரியங்களை நாம் கேட்டறிவது மிக அவசியம். ஏனெனில் பவுல், தான் காண துடித்த ரோம சபைக்கு எழுதுகையில், "விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோமர் 10:17) என்று மொழிகிறார். இப்பொழுது தெரிகிறதா கேட்பதின் அவசியத்தைக் குறித்து. விசுவாசத்தின் நீரூற்றே கேட்பதில் தான் சுரக்கிறது. நாம் காரியங்களைக் கேட்டறியாமல் இருப்போமானால் ஒரு மிகப்பெரிய இழப்பை சம்பாதிக்க நேரிடும், எதுவென்று அறிய ஆவலாய் இருப்பீர்கள். எபிரேய எழுத்தாளர் உங்கள் முன் எடுத்து வைப்பதை பாருங்கள், "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் .."(எபி.11:16)

கேட்பது நல்லதுதான். ஆனால் கேட்பதை எல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்வது என்பது அறிவுள்ள செயலாய் அடியேனுக்கு தென்படவில்லை. அதுவும் குறிப்பாக பரமனை பற்றிய பரந்த உண்மைகளை பற்றி கேட்கும் பொழுது வேதாகமத்தை அளவுகோலாய் வைத்து சொல்லப்படுவதை அதோடு ஒப்பிட்டு பின்பு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். நற்குணசாலிகளாய் திகழ்ந்த பெரோயா பட்டணத்தார் இவ்வழி முறையைத் தான் பின்பற்றினார்கள். அதினால்தான் அவர்கள் நற்குணசாலிகளென்று பரிசுத்த ஆவியானவரால் போற்றப்பட்டார்கள் (அப். 17:11) நாமும் இரவும் பகலும் தெளிதேனை விட இனிதே சுவைக்கும் இந்த வேதாகமத்தை பற்றி ஆராய்வோம். அதைக் குறித்து அதிகம் கேட்டறிவோம்.

## உலகக் கவலை இவனுக்கு தேவனைவிட பெரியதாய் தோன்றியது

கண்களால் காண்பவைகளையும் காணமுடியாதவைகளையும் ஆறே நாளில் அடுத்தடுத்து வாயின் வார்த்தைகளால் படைத்தெடுத்து அதை பக்குவமாய் பேணுகிற தேவனைக் காட்டிலும், அவர் படைத்த இந்த உலகத்தில் உண்டானவைகளை நேசித்ததால் அகிரிப்பாவை ஒரு சரியான முடிவெடுக்க முடியாமல் அறிவை துடைத்தெடுத்தது. நாமும் கூட அப்படித்தானே. வேதம் கொடுக்கும் எச்சரிப்பை அநேகம் தரம் கேட்டும் செவிடன் காதில் சங்கூதிய நிலையில்தான் இருக்கிறோம்.

உலகெங்கும் உலாவரும் மனிதர்களெல்லாம் உல்லாசமாய் வாழ எண்ணுகிறார்கள். தேவனோ ஒவ்வொருவரும் மனம் திரும்ப வேண்டும்

என்பதில் மிக ஆவல் கொண்டவராய் எதிர் நோக்கி நிற்கிறார். ஆனால் வெகுநாள் நின்றுகொண்டே இருக்கமாட்டார். அவரும் உட்காருவார். கால்வலியால் உட்காருவார் என எண்ணாதீர்கள். நியாயாசனத்தில் நம்முடைய கிரியைக்கு தக்க பலனை அளிக்கும்படி நீதியுள்ள நியாயாதிபதியாய் உட்காருவார்.

வாலிப காலத்தில் உலகத்தின் மீது வாஞ்சை வந்துகொண்டே இருக்கும். ஆனால் விவிலியம் என்ன விளம்புகிறது பாருங்கள் "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை..." (பிரச.12:1). நாம். நம்மை உருவாக்கினவரை உள்ளளவும் நினைப்பது அவசியம். சிலரிடம் அப்படி சொன்னால், உங்களுக்கு வேலையில்லை, இந்த வயதில் அனுபவிக்கவில்லை என்றால் நான் என்று அனுபவிக்கட்டும்! என்பார்கள் தங்களை அறிவாளிகள் என எண்ணிக்கொண்டு. வேதமே அவர்களுக்கு வெளிச்சம் காட்டட்டும், பிரசங்கி பதில் தருகிறார் "வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு! உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னை பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட;" இத்தோடு வசனத்தில் வாலிபர்களை வசைபாடாமல் நிறுத்தியிருந்தால் பரவாயில்லை ஆனால் பிரசங்கி இனிதான் ஓர் கசப்பான உண்மையை கூறி நம்மை கொக்கிபோட்டு இழுக்கிறார். "ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" (பிரச 11:9) என எச்சரிக்கிறார். வாலிபர்களே! உலக கவலை உங்களை சுண்டி இழுக்கும் ஆனால் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வசனம் உங்களிடம் ஆயுதமாய் இருந்தால், சுண்டி இழுக்கும் கயிறை நாம் துண்டித்து விட்டு, சாத்தானை வீழ்த்தினோம் என வீரு நடைபோடலாம்.

அகிரிப்பாவோ பவுலின் பதிலை கேட்டபின்பும் உலகம் ஒரு முள்ளாக வளர்ந்து வசனத்தை வளரவிடாமல் தடுத்ததினால், இம்மையில் கிடைக்கும் சிற்றின்பத்தை நினைத்தவனாய் மறுமையின் நம்பிக்கையை தரும் தேவராஜ்யமாகிய சபையை கொஞ்சத்தில் நழுவவிட்டான். அவன் சொல்வதை கேளுங்கள். **"நான் கிறிஸ்தவனாவதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்"** (அப். 26:28). கேட்பதற்கு எவ்வளவு வேதனையாய் இருக்கிறது. ஒருவேளை அவன் ரோம அரசனாயிருந்ததால் அவனுடைய மனமாற்றத்திற்கு அது பெரும் தடையாய் இருந்திருக்கும். எது எப்படியோ, **கொஞ்சத்தில் தவறவிட்டுவிட்டானே.** அவன் அடைய போகும் பலனை நினைத்தால் நெஞ்சம் பதைபதைக்கிறது. நாமோ அப்படியிராமல் வேதத்தின் அறைகூவலுக்கிணங்க மனந்திரும்பி மறுமையின் மாட்சிமையை அடைந்து மகிமைபொருந்திய மகிபன் இயேசுவோடு என்றென்றும் வாழ இப்பொழுதே தேவனிடம் நற்சீர்பொருந்துவோம்.

ஜே. பிக்கின்ஸ்

# நோவாவின் பேழையும் கிறிஸ்துவின் சபையும்

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். பின்பு தேவன் ஆகாயவிரிவையும், வெட்டாந்தரையையும், சமுத்திரத்தையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன் புல்லையும், பூண்டுகளையும், கனிவிருட்சங்களையும் முளைப்பிக்க செய்தார். தேவன் அது நல்லது என்று கண்டார். ஆகாய விரிவில் பகலை ஆள பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன்: சகலவிதமான நீர்வாழும் ஜந்துக்களையும், சகலவிதப்பட்சிகளையும் சிருஷ்டித்தார். தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊறும் பிராணிகளையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லது என்று கண்டார். இவ்விதமாய் தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் அவருடைய வார்த்தையினாலேயே உண்டாக்கினார் ஆதி 1:1-25

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக;

அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும் பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். ஆதி 1:26. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானாள் ஆதி 2:7

மேற்கண்ட சிருஷ்டிப்பின் வரலாற்றை பார்க்கும் போது உலகத்தில் காணப்படுகிற சகல சிருஷ்டிப்பிலும் மனுஷன் மேன்மையான நிலையில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். தேவன் மனுஷனுடைய சகல தேவைகளையும் உண்டாக்கி அவைகளை ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார் ஆதி 1:28 பின்பு தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது ஆதி 1:31.

ஆம்! இன்றும் மனுஷன் ஆகாய விரிவையும் அதில் வர்ணிக்க வார்த்தைகள் இல்லாத வண்ணங்களையும், வானத்தில் காணப்படும் சுடர்களில் காலையில் கம்பீரமாய் எழும்பி மாலையில் மறையும் கதிரவனின் காட்சியும்,

இரவில் சாந்தமான தோற்றத்தில் எழுந்து வரும் சந்திரனும் ஆங்காங்கே மின்னிகொண்டு வானத்தை அலங்கரிக்கும் நட்சத்திரங்களையும், எப்பொழுதாவது தோன்றி மறையும் வால்நட்சத்திரங்களையும் கண்டு மனதில் மகிழ்ச்சி கொள்ளத மாந்தர் யாவரும் இம்மண்ணில் இல்லை. இவ்வாறு மனுஷன் மகிழும்போது அவைகளை உண்டாக்கினவரை நினையாமல் இருப்பதுமில்லை. காரணம் " வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது என்று சங் 19:1ல் தாவீது கூறுகிறான். ஆம், அவைகள் இன்றும் தேவனை மகிமைப்படுத்துகின்றன.

அதுமட்டுமல்ல தேவனால் உண்டாக்கப்பட்ட சமுத்திரம், அதில் காணப்படும் நீர்வாழ் ஜந்துக்கள், பூமியும் அதில் காணப்படும் இயற்கை காட்சிகளையும் தேவனால் உண்டாக்கப்பட்ட பறவைகள் மிருகங்கள் இவைகளை கண்டு மனம் மகிழாதவர் எவருமில்லை. இவ்வாறு தேவன் தாம் உண்டாக்கின சகல சிருஷ்டிப்புகளாலும் மகிமையடைகிறார்.

ஆனால், ஆதி 6:6 ஐ வாசித்தால் "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது" என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு காரணம் என்ன? இதை குறித்து சாலமோன் ஞானி எழுதுகிறார். "இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள் இதை மாத்திரம் கண்டேன்" என்று பிர 7:29 ஆம்! நோவாவின் நாட்களில் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு மனஸ்தாபப்பட்டார் என்று எழுதப்பட்டுள்ளது. இதை குறித்து ஆண்டவராகிய இயேசு மத் 24:38ல் "ஜலப்பிரளயித்துக்கு முன்னாள் காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்க நாள் வரைக்கும். ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள்;... என்று கூறுகிறார். எனவே மனுஷனுடைய செயல்கள் தேவனுடைய இருதயத்துக்கு விசணமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்து பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவர்களை நிக்கிரகம் பண்ணுவேன். நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது என்றார் ஆதி 6:7

அந்நாட்களில் வாழ்ந்த மனுஷர்களில் நோவா என்பவனுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. காரணம் நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாய் இருந்தான் நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்று ஆதி 6:8-9ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் நோவாவை நோக்கி மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களை பூமியோடுகூட அழித்து போடுவேன் என்றார் ஆதி 6:13,17 ஆனால் கர்த்தரின் கண்களில் கிருபை கிடைத்த நோவாவையும் அவன் சார்ந்தவர்களையும் அந்த அழிவிலிருந்து இரட்சிக்கும்படி கர்த்தர் நோவாவை நோக்கி நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு, அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு என்றும் அதை பண்ண வேண்டிய விதத்தை குறித்து பேழையின் நீளம் முன்னூறு முழமும் அதின் அகலம் ஐம்பது முழமும், அதன் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும். பேழைக்கு ஒரு ஜன்னலும் கதவும் பண்ண வேண்டும் என்று கட்டளையிட்டார். அந்த பேழை தேவனுடைய கட்டளையின்படியே நோவாவின் மூலம் செய்து முடிக்கப்பட்டது ஆதி 6:22

கர்த்தருடைய வார்த்தையின்படியே நோவாவும் அவன் வீட்டாரும் மற்ற ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களும் பேழைக்குள் பிரவேசித்தன அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார் ஆதி 7:16 ஜலப்பிரளையம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானது. மனுஷர் முதல் மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து; அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின. நோவாவும் அவனோடு பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன ஆதி 7:23

பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசிர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார் ஆதி 9:1 அவ்வாறே நோவாவின் சந்ததியின் மூலம் மனுகுலம் பெருகி பூமி நிறைந்தது.

பல நூற்றாண்டுகளுக்கு பின்பு தாவீது எழுதின சங்கீதத்தில் "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். எல்லோரும் விலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நம்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை என்று எழுதுகிறான். (சங் 14:2-3) அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தில் ரோ 3:23ல் எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள் என்று எழுதுகிறான்.

பாவம் செய்தவன் ஆக்கினைக்கு உட்பட்டவனாயிருக்கிறான். நோவாவின் நாட்களில் மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினபடியால் ஜீவ சுவாசமுள்ள யாவும் ஜலத்தினால் அழிக்கப்பட்டன. ஆனால், இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையிலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறான் II பேது 3:7

இயேசுகிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையை குறித்து சொன்ன காரியங்களை, மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இவ்வாறு கூறுகிறார்.

"அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார் அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே. உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார் காரணம் வலது பக்கத்தில் இருந்தவர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்த நாட்களில் தேவனுடைய சித்தத்தின்படி வாழ்ந்தவர்கள் என்பதை மத்தேயு 25ம் அதிகாரத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார். காரணம் இவர்கள் தங்கள் ஜீவிய காலத்தில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றாமல் தங்களின் சுய சித்தத்தின்படி வாழ்ந்து பாவம் செய்தவர்களாக காணப்பட்டவர்கள். மத் 25:31-41

மேற்குறிப்பிட்டுள்ள வசனங்களை குறித்து சிந்திப்போமானால் இந்த பூமியும், ஜீவசுவாசமுள்ளயாவும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் தேவனோ மனுஷனை அவனுடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவனை அக்கியின் ஆக்கினைக்குட்படுத்தாமல் இரட்சிக்கவே சித்தம் கொண்டுள்ளார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார் என்று I தீமோ 2:4ல் பவுல் எழுதுகிறான் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன்

சித்தம் கொண்டமையால் அந்த இரட்சிப்பை கிருபையாய் அளிக்கின்றார் என்று எபே 2:5ல் பவுல் கூறுகிறான்.

தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்த நோவாவை ஜனத்தின் அழிவிலிருந்து பாதுகாத்திட நோவாவை கொண்டு பேழையை உண்டு பண்ணின தேவன் அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்படுகிறவர்களை வரவிருக்கும் அக்கினியின் அழிவிலிருந்து பாதுகாத்திட தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இப்பூமியில் அருமையான ஒரு வீட்டை கட்டியிருக்கின்றார். இந்த செய்தி உங்களுக்கு வியப்பாக இருக்கும் என்று எண்ணுகிறேன்! இதை குறித்து வேதத்தை சற்று ஆராய்ந்து பார்க்கலாமா?

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் 1 தீமோ 3:15ல் இவ்வாறு எழுதுகிறார். "தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" சபையாகிய இந்த வீட்டை கிறிஸ்து இயேசு தாமே கட்டபோவதாக தம்முடைய சீஷர்களிடத்தில் முன்னறிவித்தார் மத் 16:18.

தேவன் தம்முடைய சித்தத்தின்படி பேழையை உண்டுபண்ணும்படி நோவாவுக்கு கட்டளையிட்டார். இதில் நோவா தன்னுடைய விருப்பத்தின்படி எவ்விதமான மாற்றமும் செய்யாமல் தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான். ஆதி 6:22. அதுபோல இயேசுகிறிஸ்துவினால் கட்டப்பட்டுவரும் சபையாகிய வீட்டை குறித்து தேவனுடைய திட்டத்தை பவுல் இவ்வாறு எழுதுகிறார். "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்தி பாரத்தின்மேல் சுட்டப்பட்டவர் களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்றும் (எபே 2:20-22) 1 கொரி 3:11ல் போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைபோட ஒருவனாலும் கூடாது என்றும் திட்டவட்டமாக கூறுகிறாள்.

தேவனுடைய திட்டத்தின்படியே கிறிஸ்து சபையாகிய வீட்டை இந்த உலகத்தில் ஸ்தாபித்தார். நோவாவை கொண்டு ஒரே பேழையை உண்டு பண்ணினது போல தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஒரே சபையைதான் ஸ்தாபித்தார். அந்த சபைக்கு கிறிஸ்துவின் நாமம் தரிமிக்கப்பட்டு கிறிஸ்துவையே ஸ்தாபகராகவும் தலைவராகவும் தந்தருளினார் எபே 1:23

சபையை குறித்து தேவனுடைய திட்டம் இவ்வாறு இருக்க மனுஷர் தங்களின் பிழைப்பிற்கென்று பட்டி தொட்டிகளில்லெல்லாம் குடிசை தொழில்களை ஆரம்பித்து நடத்துவது போன்று ஏராளமான சபைகளை தங்கள் மனம்போல ஆரம்பித்து அந்த சபைக்கு தங்களையே ஸ்தாபகர் என்றும் தலைவர் என்றும் கூறிகொண்டு மனுஷருடைய கற்பனைகளையே உபதேசங்களாக போதித்து விலைமதிக்க முடியாத ஆத்துமாக்களை வீணராக்கி கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது. இயேசு கிறிஸ்துவின் நாட்களில் ஜனங்களை இவ்வாறு தவறான வழியில் நடத்தி சென்ற வேதபாரகர் பரிசேயர்களை பார்த்து இயேசு: மாயக்காரராகிய வேதபாரகரே; பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் எதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்க போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை எனது மத் 23:13ல் வன்மையாக கண்டித்தார்.

ஆம், அருமையான தேவ ஜனமே விழித்திருங்கள்! கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் குறித்து பிரசங்கிக்காதவன் சபிக்கப்பட்ட வன். அப்படிப்பட்டவனை நம்பி நீங்கள் ஏமாற்றம் அடையவேண்டாம். நாம் இரட்சிக்கப்படுபடும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை (அப் 4:12) அதுபோல வரவிருக்கும் அக்கினியின் அழிவிலிருந்து ஜனங்களை காப்பாற்றிட அவருடைய (கிறிஸ்துவின்) சபையேயல்லாமல் வேறொரு சபை கட்டளையிடப்படவில்லை.

அந்த உன்னதமான சபையில் எல்லா மனுஷரும் பிரவேசிக்கும்படி அதன் கதவுகள் இன்று திறந்தே உள்ளது. நோவாவின் நாட்களில் ஜலத்தினால் அழிவு நெருங்கினபோது பேழையின் கதவு அடைக்கப்பட்டது. அதுபோல மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்துவின் சபையின் கதவுகள் அடைக்கப்படும். கதவுகள் திறந்திருக்கும் போதே அதில் பிரவேசியாதவர்கள் கதவுகள் அடைக்கப்பட்டபின் ஆண்டவரே ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்று கூக்குரலிட்டாலும் உங்களை அறியேன் என்று தள்ளப்படுவீர்கள். மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையயாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் மத் 25:1-13.

தேவன் உங்களையும் காக்கும்படி இந்த உலகத்தில் ஸ்தாபித்துள்ள அவருடைய மெய்யான சபையை அடையாளம் கண்டுகொள்ள உங்கள் மன கண்களை தேவன் திறந்தருள்வாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

*ஹென்றிமோகன்.*

# தேவனை மகிமைப்படுத்துங்கள்

"…. நான் என்பிதாவை கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள், நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் (யோவான் 8:49-50)

தேவனை உலகிற்கு காண்பிக்கவே இயேசு புவியில் வெளிப்பட்டார். இயேசு, பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்தார், இருக்கிறார். இப்பூலோகத்தில், இருந்தபோது. தன் பிதாவை கனம் பண்ணவும் அவரையே மகிமைப்படுத்தவும் நாடினார். அவர் தனக்கென்று மகிமையை தேடவில்லை. அவர் அப்படி தேடியிருந்தால் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷச் சாலாயிருக்கமாட்டாரே (பிலி 2:7). மேலும், அடிமையின் சின்னமாகிய சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தி, கீழ்படிந்திருக்க வேறு காரணம் ஒன்றுமில்லையே. சிலுவையில் அறைந்து கொல்லுதல் ஒருவரையும் மகிமைப்படுத்தவில்லை; மாறாக அது அறையப்பட்டவனை சாபமாக்கிற்று (உபா 21:23) சிலுவை ஒருவனின் அடிப்படை குணாசதியங்களை காண்பிக்கிறது. மகிமைக்கு பாத்திரமாயிருந்து அதை எதிர்பாக்கிற தேவை (பிதாவை) மகிமைப்படுத்த வேண்டும் என்று பாவமில்லாதிருந்த, தெய்வீகமாய் மாமிசமான இயேசு தன் மகிமையைப் துறந்து இந்த கோரமரணத்தின் சாயலை ஏற்றுக்கொண்டார். அவர் தன் பிதாவின் சித்ததிற்கு முழுமையாய் தன்னை அற்பணித்தார்.

தேவன் மகிமைக்கு உரியவராய் இருக்கிறபடியால் அதை எதிர்பார்க்கிறார் இயேசு, தேவனை மகிமைக்கடுத்துவதில், தவறு ஏதும் காணவில்லை தேவனை துதிக்கும்படி, கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார். எல்லா படைப்பும் அவரை மகிமைப்படுத்துகிறது. நாம் ஏன் மகிமைப்படுத்தக் கூடாது? தேவன் எதிர்பார்ப்பதால் அவரை மகிமைப்படுத்துவதில் நாம் வெட்கப்படாதிருப்போமாக அவரை மகிமைப்படுத்தினால் கிறிஸ்து வெளிப்படும் காலத்தால் நம்மை மகிமைப்படுத்துவார் (ரோர் 8:18)

எல்லா வழிகளிலும்அவரை எப்பொழுதும் மகிமைப்படுத்த இப்பொழுதே தீர்மானம் செய்வோம்.

*தாமஸ் ஆர். டாக்லிங்*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, MAY 99
MAY 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."***சான்றிதழ்***" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.**

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

TO

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.